செய்தி வெளியீடு எண் : 04 நாள் : 06.08.2019

**தேனி மாவட்டம்,**
**குடிமராமத்து திட்டத்தின் கீழ்**
**ராஜபூபாலசமுத்திரம் கண்மாய் மற்றும் கோடாங்கி நாயக்கர்குளம் கண்மாய் சீரமைக்கும் பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**மத்திய அரசின் நீர் மேலாண்மை இயக்க குழு உறுப்பினர்களுடன்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பூதிப்புரம் கிராமத்திற்குட்பட்ட ராஜபூபாலசமுத்திரம் கண்மாய் ஆண்டிபட்டி வட்டம், மரிக்குண்டு கிராமத்திற்குட்பட்ட கோடாங்கி நாயக்கர்குளம் கண்மாய் ஆகிய கண்மாய்களை பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.79.90 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், மத்திய அரசின் நீர் மேலாண்மை இயக்க குழு உறுப்பினர்களான மத்திய தகவல் ஒளிப்பரப்பு அமைச்சக இணை இயக்குநர் திரு.அசோக்குமார் ஆர்.பர்மா, இ.ஆ.ப., அவர்கள், வரவு-செலவு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக இயக்குநர் திரு. சுதீப் ஸ்ரீவஷ்டவா, ஐ.ஆர்.எஸ் அவர்கள் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சக தொழில் நுட்ப அலுவலர் திரு.ஸ்ரீனிவாசா அவர்கள் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு இன்று (06.08.2019) ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிமராமத்து திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் வட்டம், பூதிப்புரம் கிராமத்திற்குட்பட்ட ராஜபூபாலசமுத்திரம் கண்மாய் ஆண்டிபட்டி வட்டம், மரிக்குண்டு கிராமத்திற்குட்பட்ட கோடாங்கி நாயக்கர்குளம் கண்மாய் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணி, மடை மறு கட்டுமானம், சட்டர் அமைக்கும் பணி, மடை பாசன வாய்க்காலில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி ஆகிய பணிகள் ரூ.79.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி சென்று கண்மாயை விரைந்து அடையும். வெள்ளக்காலங்களில் வாய்க்கால் மற்றும் கண்மாயில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்கண்மாயை சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர் தங்குதடையின்றி கிடைத்திட வழிவகை செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரஅமைப்பு) உதவி செயற்பொறியாளர் குமார், உதவித்திட்ட அலுவலர் தண்டபானி மற்றும் விவசாயிகள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**